தமிழ் உலகு

(புதன்கிழமைதோறும் வெளிவரும் ஓர் தமிழ்ப்பத்திரிகை.)

S. பட்டாபிராமன், M. A., பத்திராதிபர்.

தொ. 1. | துந்துபிஃஸு சித்திரைமீ 28உ (10-5-'22.) | ப. 3.

ச ஞ் சீ வா ஞ் ச ன்

இது அமெரிகன் பெயின் பாம்

தலை	வலி	தேள்	கடி	பல்	நோவு
மார்		பாம்புக்		கால்	
முதுகு		பூச்சிக்		காது	
இடுப்பு		விஷக்		கை	

இவைகளுக்கெல்லாம் சித்த ஔஷதம் இதுவேதான்

(உபயோகம் மேலுக்கு மாத்திரம்).

எவ்விடத்திலும் கிடைக்கும். விலை அணா எட்டு.

ஏஜெண்டுகள் தேவை !

SANJEEVINI HOUSE,

264, MINT STREET, MADRAS.

சுதேசியமானது ! உபயோகமானது ! !

அ மி ர் தா ஞ் ச ன ம்

எல்லா நோய்களுக்கும் சித்தௌஷதம்

தலைநோய், முதுகுநோய், இடுப்புவலி, மார்ச்சளி, சைத்தியம், கீல்பிடிப்பு, இருமல், ஒத்தைத் தலைநோய், வீக்கம், சுளுக்கு முதலான நோய்களுக்கு திவ்யாமிருதம்.

டப்பி 1-க்கு 0—10—0. டஜன் 1-க்கு 6—0—0.

படைமருந்து	பற்பொடி	மோஹினி தைலம்
டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு	டப்பி 1-க்கு
0—6—0	0—2—0	0—12—0

அமிர்தாஞ்சனம் டிபோ, மதராஸ், பொம்பாய்.

தபால் கூலியுள்பட சந்தா

ஒரு வருஷத்திற்கு ரூ. 5—0—0

அரை வருஷத்திற்கு ரூ. 3—0—0

'தமிழ் உலகு' கார்யாலயம்

16, பசுபதி அக்கிரஹாரம்

மைலாப்பூர், சென்னை.

விஷய அடக்கம்.

குறிப்புகள்	18
அனடோல் ப்ரான்ஸ்	19
தென் இந்தியா கல்வியும் ஸம்ஸ்கிருதமும்	20
S. ஸத்யமூர்த்தி அய்யர் அவர்கள் B.A., B.L.,	
அணுக்களும் அவை மாறுவதும்	21
P. N. அப்புஸ்வாமி அய்யர் அவர்கள் B.A., B.L.,	
நமது வெள்ளி நாணயங்கள்	,,
மாப்பிள்ளைத் தோழன்	22
காலத்தின் கொடுமை	23

தமிழ் உலகு

துந்துபிஞு சித்திரைமீ 28உ

குறிப்புகள்.

சென்ற வாரம் ஜினேவாவில் கூடியிருக்கும் மகாநாட்டின் உத்தேசங்களைப்பற்றி எழுதினோம். இன்று அவைகள் நிறைவேறுமா என்பதை சற்று விசாரிப்போம். நமக்குத் தெரிந்தவரை இதற்கு யாதொரு ஆதாரத்தையுங் காணோம். ஜெர்மனி நஷ்ட ஈடாகக்கொடுக்க வேண்டிய தொகையைப் பற்றி மகாநாட்டில் பிரஸ்தாபிப்பதில்லை என்ற ப்ரெஞ்சுக்காரர்களுடைய வேண்டுகோளுக்கிணங்க ஐக்கிய தேசத்தார் தீர்மானித்ததே மகாநாட்டின் முக்கிய கருத்தான வியாபார விருத்திக்கு முதல் இடையூறு. தற்காலம் ஸகல ஜனங்களும் தெரிந்து கொள்ளவேண்டியது யாதெனில், மேனாட்டு நாகரீக விருத்தியினாலும், சஞ்சாரங்களுக்கு உதவும் புகைவண்டி, ஆகாயக்கப்பல் முதலான ஸாதனங்கள் அதிகப்பட்டதாலும், ஒவ்வொரு தேசத்தவர்க்கும் உலக வியவகாரங்களில் புதிதாக ஏற்பட்டுள்ள ஊக்கத்தாலும், உலகம் முழுமையும் ஓர் குடும்பம்போலாயிருக்கிறது. ஏக குடும்பத்திலிருப்பவர்களிடத்தில் ஒற்றுமை இல்லாதிருப்பின், சாந்தமாயும், அன்னியோன்னிய பாவத்தோடும், சச்சரவில்லாமலும் காலம் தள்ள முடியுமோ? கலகமில்லாமல் காலங்கழிக்க உலக முழுமையும் ஒத்து வாழ வேண்டும்போது, ஐரோப்பாக்கண்ட தேசங்கள் ஒன்றுக்கொன்று பகையுண்டு, நடுவேயிருக்கும் ஜர்மனியை பிரஷ்டம் செய்து, அது சண்டை ஆரம்பித்த பாபத்தை முற்றிலும் அனுபவித்தே தீரவேண்டுமென்றால் ஐரோப்பாவில் நீடித்த சமாதானம் என்றைக்கு வரும்? வியாபார விருத்திதான் என்றைக்கு ஏற்படும்?

ஐக்கிய தேசங்களை நம்பி தனக்கு வழி பிறக்காதென்று கண்ட ஜர்மனி, மகாநாட்டிற்குச்சென்றாலும், அதனுடைய விஷயங்களில் கருத்தாயிராமல், ருஷியாவுடன் இரகசியமாக ஓர் உடன்படிக்கைசெய்துகொண்டது. இந்த உடன் படிக்கையால் இருதரத்தாருக்கும் பலம் உண்டு. ஜர்மனிக்கு ருஷியாவில் வியாபார சௌகரியம் கிடைத்ததுமன்றி, ஒரு பெரிய தேசத்தின் நேசமும் கிடைத்தது. ருஷியாவுக்கோ, தேசச் சீர்திருத்தத்திற்காகவும், பஞ்சத்தை ஒழிப்பதற்கும் ஏராளமான முதல் வேண்டியிருப்பதால், ஜர்மனியின் உதவி நல்ல சமயத்தில் வாய்த்தது. தங்களுக்குத் தெரியாமல் உடன்படிக்கை செய்துகொண்ட விஷயத்தில் ஐக்கிய தேசங்களுக்கு ருஷியாவிடத்திலும் ஜர்மனியிடத்திலும் கோபம் ஏற்பட்டாலும், அவர்களால் ஒன்றும் செய்யக்கூடவில்லை.

ஜர்மனியைப் பற்றிய விஷயங்கள் இவ்வாறிருக்க ருஷியாவைப் பற்றிய வரையிலாவது, மகா நாடு பயனடைந்ததோ? தங்களுக்குள் வெகுநாள் வாதமான பிறகு, ருஷியாவிற்கு ஐக்கிய தேசத்தார் முடையாய் வேண்டியிருக்கும் தொகையை கடன் கொடுக்கத் தீர்மானித்தார்கள். ஆனால் அதற்கு பிரதிப் பிரயோஜனமாக சில நிபந்தனைகளை ஏற்படுத்தினார்கள். அவை யென்னவெனில், குடியரசுக்கு முன்னிருந்த துரைத்தனத்தார் பட்ட கடன்களை ஒத்துக் கொள்வதென்றும், சண்டைக்கு முன் இதர நாட்டார் தங்கள் தேசத்தில் வர்த்தகத்திற்காகவோ வேறு காரணங்களுக்காகவோ வைத்திருந்த சொத்துக்களை சொந்தக்காரர்களுக்கு திரும்பக் கொடுப்பதென்றும், இதர நாடுகளில் தங்களுடைய ஏவலாளர்களைக் கொண்டு அராஜகரமான கொள்கைகளைபிரசாரம் செய்வதை நிறுத்துவதென்றும், ருஷியா ஒப்பவேண்டுமென்பதே. அயல் தேசத்தார் சொத்துக்கள் குடியரசு ஸ்தாபித்ததால் துரைத்தனத்தைச் சேர்ந்துவிட்டதென்றும், ஆகையால் அவைகளை திரும்பக் கொடுக்க முடியாதென்றும் ருஷியர்கள் ஆக்ஷேபித்ததின் பேரில், மிஸ்டர் லாயிட் ஜியார்ஜ் சொத்துக்களையே கொடுக்காமல் போனாலும் அவைகளுடைய கிரயத்தையாவது கொடுத்துவிடவேண்டுமென்று மத்தியஸ்தமாகச் சொன்னார், ஆனால் இவ்வளவு கூட ருஷியாவுக்கு இணங்க பெல்ஜியத்திற்கும் ப்ரான்ஸுக்கும் இஷ்டமில்லை. ஆகையால், முடிவாக ஐக்கிய தேசத்தார் ருஷியாவுக்கு அனுப்பியிருக்கும் ராஜிப்பத்திரத்தில் பெல்ஜியமும் ப்ரான்ஸும் கையொப்பம் செய்யவில்லை. ஆகவே, 'இந்த உடன்படிக்கைக்கு ருஷியா சம்மதப்பட்டாலும், ஐரோப்பா முழுவதிலும் சமாதானமும் வியாபாரவிருத்தியும் ஏற்பட காரணமில்லை.

ஐரோப்பிய சமாதானத்திற்குத் தற்காலம் முக்கிய இடையூறு ப்ரான்ஸே. அதற்கு என்றைக்கும் ஜர்மனியிடத்தில் வெறுப்பும் அசூயையும் உண்டு. ருஷியாவிடத்தில் அவமதிப்பும் உண்டு. இவையெல்லாம் சண்டையால் பதின்மடங்கு விருத்தியாயிருக்கிறது. ஆகையால் தனக்கும் இத்தேசங்களோடு சமாதானமாக இஷ்டமில்லை. சண்டையில் தன் கட்சியிலிருந்த தேசங்களும் இவைகளுடன் சேரக்கூடாதென்பது இதன் கருத்து. இம்மாதிரி எண்ணமிருக்கும்வரை ஆயிரம் மகாநாடுகள் கூடினும் பயனென்ன?

மலையாளத்தில் மாப்பிள்ளைக் கலகத்தால் லக்ஷக்கணக்கான ஜனங்களுக்குண்டாயிருக்கும் துன்பங்கள் நம்நேயர்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

மானமாயும் கஷ்டப்படாமலும் காலங்கழித்து வந்த ஆயிரக்கணக்கான குடும்பங்கள் வீடுவாசல் இழந்து தலைதப்பியோடி, கோழிக்கோடு, பாலாக்காடு முதலிய ஊர்களை யடைந்து, சகிக்க முடியாத வறுமையுடன் காலந்தள்ளி வருகின்றன. ஊழியம் செய்து வயிறு வளர்த்து வந்த ஜனங்கள் வேலையகப்படாமல் வருந்துகின்றார்கள். மலையாளத்தில் இனி அடைமழைக்காலமானதால், குடியிருக்க இடமில்லாமலும், சோற்றிற்கு வழியில்லாமலும், உடல் பிணிகளாலும் மனப்பிணிகளாலும் சோர்ந்து, நம்சகோதரர்கள் ஆயிரக்கணக்கில் மடியலாம். இதை நாம் கவனித்து அவர்களுக்கு நம்மாலியன்ற மட்டும் உதவி புரியாமலிருக்கலாமா? இவர்களுடைய கஷ்டங்களைக் கண்டு மனம் வருந்தி பம்பாய்வாசிகள் அநேக லக்ஷ ரூபாய்கள் வசூல் செய்தனுப்பியிருக்கிறார்கள். நம் ராஜதானியிலே இது வரை ஒரு லக்ஷம்ரூபாய் கூட வசூலில்லை. இதைவிட நமக்கு அவமானம் வேறு வேண்டுமோ? இதைப்படிக்கும் நமது நேயரெல்லாம் அவரவர் சக்திக்கு ஏற்றபடி பணமும் துணிகளும் கோழிக்கோட்டிலிருக்கும் 'மலபார் சென்ட்ரல் ரிலீப் கமிட்டீ'க்கு அனுப்புவார்களென்று நம்புகிறோம்.

அனடோல் ப்ரான்ஸ்.

ப்ரெஞ்சு பாஷையில் மகாகவி யெனக் கீர்த்தி பெற்ற இக்கிழவர் தன் சகோதரர்களான பிரெஞ்சுக்காரர்களுக்கு சமீபத்தில் ஓர் பெரிதான விஷயத்தைப்பற்றி யெழுதியிருக்கின்றார். இங்கு நாம் அதைச் சொல்லாமலிருக்கக்கூடவில்லை. அவர் எழுதுவதாவது :—

இம்மகா கோரமான யுத்தம் முடிந்த பிறகும், இனிமேலும் போர்புரியக்கூடாதென்ற அறிவு நமக்கு இன்னமும் வரவில்லை. இத்தேசத்தில் (பிரான்ஸில்) ராஜாங்கக்காரியங்களை கவனிக்கும்பொழுது, நமக்கு இந்த புத்தி கொஞ்சமும் வந்து விட்டதெனத் தோன்றவில்லை. ராஜாங்கத்தார் எப்பொழுதுதான் திருட்டுத்தனமான வழிகளை விட்டு நேராக நடக்கப்போகிறார்கள்? இதுவரையில் ராஜ்ய தந்திரிகள் மூடு மந்திரம் செய்து வந்ததும் அதினால் விளைந்த ஆபத்துக்களும் எப்பொழுதுதான் ஒழியும்? நாட்டிலுள்ள பத்திரிகைகள் ஒழுங்கான மார்க்கத்தை ஆதரிப்பதல்லாமல், முற்றிலும், ஸர்க்கார் உத்தியோகத்திலமர்ந்தவர்களைப் போல், எக்காலமும் கவர்மெண்டாரை யனுஸரித்து நடப்பது வெட்கமே. இந்த யுத்தத்தில், அனுபவத்தால், நல்ல விஷயங்களைத்தெரிந்து கொண்ட பிறகும், அவைகளைக் காரியத்தில் நடத்தாமல், முன்னிலும் பதின்மடங்கு நாம் புத்தியீனமாக யிருப்பது மிகவும் வியசனிக்கத்தக்கது. ருஷியாவுடன் சமாதானமாய்ப்போகாமல், தமக்கிருக்கும் சைன்ய பலத்தால் வெறிபிடித்து, இப்பிரெஞ்சு கவர்மெண்டார் பிடிவாதம் செய்துவருவது உலகத்திற்கே நன்மையை யளிக்கக்கூடுமென நாம் நம்பவில்லை. ஆ, என்ன விபரீதம்! காலகதிக்கு விரோதமாக, எந்த பலத்தைக் கொண்டும், நாம் எதைத்தான் செய்யக்கூடும்? காலத்தை யொத்து நடப்பதே நலத்தைத் தரும். அதற்கு விரோதமாக நடப்பதோ விபத்தைத் தவிர வேறு எதையும் நமக்களிக்கமாட்டாது. யுத்தம் முடிந்ததும் ஜயமடைந்தவர்கள் சகல போகங்களையு மனுபவித்து, வெற்றிக்கொடியுடன் ஆண்டுவந்த நாள் அப்பொழுதே போய்விட்டது. ஏனெனில், இப்பெரும் போரிலிருந்து ஜயத்துடன்கிளம்பினவர்களும் மிகவும் களைத்து விட்டார்கள். இதை நாம் மறவாமல் ஞாபகத்தில் வைத்துக் கொள்வோம். வெற்றியும், தோல்வியும் ஒரே பலனைக்கொடுக்கும் இக்காலத்தில், நாம் ஜயித்து விட்டோமென்ற மதம் பிடித்தவர்களைக் காட்டிலும் ஞானமில்லாதவர்களில்லை. கஷ்டதசை யென்பது இருவருக்கும் நிச்சயமாய் நேரும்போது, நாம் யுத்தமே செய்யாதிருத்தல் இன்றியமையாதது அல்லவா? மேலும், எல்லாதுக்கத்திற்கும் காரணமாயுள்ள சச்சரவுகளை நாம் உடனே நீக்கவேண்டும். ஐரோப்பிய மகாயுத்தமென்று சொல்லப்பட்ட இப்படுகொலையில் நாம் அறிந்தது யாவும் பயனடைய வேண்டுமாகின், ஒருவருக்கொருவர், குற்றங்களைப் பொறுத்துக், கடந்ததெல்லாவற்றையும் பெருங்குணத்துடன் மறந்து, எங்கும் ஜனங்கள் சுகமடைந்து வாழும் வழியை நாம் தேடவேண்டும். இது தான் காரியம். இதெல்லாமல், துரதிருஷ்டத்தால் தோல்வி யடைந்தவர்களை, நாம், நெஞ்சு அற்று, செத்த பிணத்தைப்போல், பிடுங்கியெடுப்பது நம்மிருவருக்கும் தீமையைத் தான் தருவதாக ஆகும். இப்பொழுது ஐரோப்பாவில் க்ஷேமத்தை நிலைநாட்டுவதே நம்முடைய கடமை. அக்கண்டத்தில் முழுமையும் சமாதான மென்பது முற்றிலும் ஏற்படாதவரையில், எந்த தேசத்திற்கும் கலப்பற்ற வாழ்வு வரக்கூடுமென நாம் எண்ணவில்லை. ஒருவருக்கொருவர் போட்டியும், நெருப்புப் பொறி பறக்கும் பொறாமைக் கண்ணுடன் ஒருவரையொருவர் நோக்குவதும், இன்றுடன் ஒழியட்டும். இம் மகத்தான துன்பங்கள் துலைந்தால் தான் செழிப்பு என்ற விரை ஐரோப்பாவில் எங்கும் முளைக்கும். இக்கடும் போரில் நாம்பட்ட நஷ்டத்திற்காக, சத்துருக்களிடமிருந்து பொருளை யெதிர்பார்ப்பது யுக்தமேயாகினும், ஈவிரக்கமற்ற அசுரர்களைப்போல, நாம் இப்பொழுது கேட்கும் திரளற்ற பணத்தை யெதிர்பார்ப்பது நமக்குத்தீங்காகவே முடியும். எங்கிருந்துதான் ஜெர்மானியர்கள், நாம் உத்திரவிட்டபடி, கோடிக்கணக்காக தனம் கொண்டுவருவார்கள்? பழிக்குப் பழி வாங்குவதாகாதென்று நாம் இங்கே உபதேசிக்கவரவில்லை. ஆகினும், தாக்ஷிண்யம் மாத்திரம் எக்காலத்திலும் கைவிடத்தகுந்ததல்ல வென்று நாம் வற்புறுத்த விரும்புகின்றோம். கேவலம் பலத்தால் (இருமாப்புடன் நாம்) நடப்போமாயின், இப்போரில் தோல்வியடைந்தவர்களின் வழியே தான் நாமும் போகவேண்டும். என்றைக்கும் நாம் நிதானத்தைக் கைவிடலாகாது. இங்கிலண்டைப் பார்த்து, நாமும் மற்ற தேசங்களைக் கைப்பற்ற வேணுமென்று ஸ்வப்னத்திலும் நினைப்பது பிசகு. ஏனெனில், இங்கிலண்டின் நிலைமை தற்காலத்தில் நிரம்பவும் சௌக்கியத்தைத் தரத்தக்கதாயில்லை. இங்கிலண்டில் போல, நம் தேசத்தில் (பிரான்ஸில்) ஏழை ஜனங்கள் வேலைக்காகத்திரிந்து கஷ்டப்படுகிறார்களல்ல. ஆகையால் நாம் நமக்குக் கிடைத்தவைகளைக் கொண்டு சந்தோஷ மடைவோம். பதவரிசையுடன், நாம் நமது கையில் சிறுமைப்பட்டவர்களிடம் நிதானத்தையும், தாக்ஷிண்யத்தையும் காண்பிப்போம். அவர்களையும் உயிருடனும், உடலுடனும் வைத்து, அவர்களுக்கும் வாழும் பிக்ஷையைத்தந்து, நம்மால் இயன்றமட்டும், அவர்களைக் குரூரமாய் நடத்தாமல், நாம் தயவுடன் அவர்களிடம் அன்பு பாராட்டிவருவதே முக்கியமென நம்புகின்றோம். பணமும், இன்பமும் ஒருபக்கமிருக்கட்டும். அவைகளுக்காக நாம் மிருகத் தன்மையுடன் நடப்பது அவமானமாகும். அவைகளைப் பார்க்கிலும் இன்னும் மிக்க உயர்ந்த விஷயங்களிருக்கின்றன. நாம் சத்துருக்களின் சம்பந்தமாக மிகவும் நல்லவர்களென்றும், ஒப்புயர்வற்ற பெருந்தன்மைவாய்ந்தவர்களென்றும் இனிபெயரெடுப்போம்.

தென் இந்தியா கல்வியும் ஸம்ஸ்கிருதமும்.

(ஸ்ரீமான் S. ஸத்யமூர்த்தி அய்யர் அவர்களால்)

தற்காலக் கல்விமுறையில் ஸம்ஸ்கிருதத்திற்குள்ள கௌரவம் வரவரக்குறைந்துகொண்டு வருகிறது. ஆனால் முன் காலத்தில் நமது நாட்டில் ஸம்ஸ்கிருத மூலமாகவே ஆதிமுதல் அந்தம் வரையில் படிப்பு எல்லாம் போதிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வந்தது என்பது எல்லோரும் அறிந்த விஷயம். அதுவுமன்றி நமது வேதங்களும் இதிஹாஸங்களும், புராணங்களும், சாஸ்திரங்களும், ஸ்மிருதிகளும் அப்பாஷையிலேயே இருக்கின்றன. நமது பெண்மக்களும் அப்பாஷையில் தேர்ந்தவர்களாக யிருந்தார்கள்.

ஸம்ஸ்கிருத பாஷையில் எண்ணிறந்த நாடகங்களும் காவ்யங்களும், தத்துவ சாஸ்திரங்களும், வைத்திய சாஸ்திரங்களும், சட்டங்களும், தேச சரித்திரமும், அர்த்த சாஸ்திரமும் இருக்கின்றன. அப்படியிருந்தும் இந்நாளில் அரசாங்கத்தாரும் ஜனங்களும் ஸம்ஸ்கிருத பாஷையினிடத்தில் உபேக்ஷையாகயிருக்கின்றார்கள். இப்பொழுது படிக்கும் குழந்தைகளில் பெரும்பாலோருக்கு அக்ஷராப்பியாஸதினத்தன்றி ஸம்ஸ்கிருத வாஸனையே கிடையாது.

ஆனால் யோசித்துப் பார்க்குமளவில் நமது நாட்டில் எல்லாப்பிள்ளைகளும் ஓர் அளவாவது கட்டாயமாய் ஸம்ஸ்கிருதம் படிக்கவேண்டுமென்பது எல்லோரும் ஒப்புக்கொள்ளவேண்டிய கொள்கை. இதற்குப்பலகாரணங்கள் உண்டு. சிலவற்றை மாத்திரம் சொல்லுகின்றேன்.

ஆங்கிலநாடு முதலிய எல்லா நாகரீகம் பெற்ற இதர நாடுகளில் ஏதாவது ஓர் புராதன பாஷை (Classical Language) படிக்கவேண்டியது அவசியமென்று எல்லாபிள்ளைகளும் அப்படிப்பைப் படிக்கும்படி கட்டாயமாய் வைத்திருக்கிறார்கள். தங்கள் நாட்டில் அம்மாதிரி பாஷையில்லாவிடினும் பிற நாட்டிலிருந்து பிச்சை வாங்கியாவது அப்பாஷையைப் படிக்கின்றார்கள். உதாரணமாக ஆங்கில நாட்டார் அன்னிய நாட்டு பாஷையாகிய லாட்டின் (Latin), அல்லது கிரீக் (Greek) பாஷையைப் படிக்கின்றார்கள். அப்பாஷைக்கெல்லாம் எல்லா விதத்திலும் பெருமை வாய்ந்த, கீர்வாண பாஷை என்று பெயர் பெற்ற, நமது பெரியோர் நமக்காக தேடிவைத்த அருமையான ஸம்ஸ்கிருத பாஷையை நாம் அசட்டை செய்து வருகின்றோம். அதுவுமன்றி உண்மையான படிப்பை சரியாகப் படித்துத் தேறவேண்டுமென்று ஒருவன் ஆசைப்பட்டால் கட்டாயமாக ஓர் புராதன பாஷையை யாவது அவன் கற்கவேண்டுமென்பது உலகத்தில் உள்ள எல்லா பெரிய போதகாசாரியர்களுடைய அபிப்ராயம். மேலும் நாம் ஸம்ஸ்கிருதம் அறியாவிட்டால் நம் நாட்டிலேயே பரதேசிகளா யிருக்கவேண்டும். நம் நாட்டின் சரித்திரத்தையும் பெருமையையும் நன்கு அறிய வேண்டுமென்றால் ஸம்ஸ்கிருத பாஷையைத் தவிர வேறு வழி கிடையாது.

ஆனால் ஸமஸ்கிருதம் படித்தால் நம் பிள்ளைகள் லௌகிக வாழ்க்கைக்கு அனர்ஹர்களாய் விடுவார்களென்று சிலர் சொல்லுகிறார்கள். அந்த அபிப்ராயம் முற்றிலும் தவறு. ஸமஸ்கிருதத்தில் மிகவும் உத்கிருஷ்டமான கிரந்தம் பகவத்கீதை. அதனுடைய தத்வார்த்தத்தை எடுத்துரைக்க நான் சக்தியற்றவன். ஆயினும் அந்த பகவான் அர்ச்சுனனுக்கு உபதேசித்தவுடன், அவன் லௌகிக மார்க்கத்தை ஒழித்து ஸந்நியாஸியாகவில்லை. அவனுக்கு ஏற்கனவே யிருந்த ஸந்தேகங்களெல்லாம் ஒழிந்து ஸவ்யஸாசியாய்ப் பகைவருடன் பதினெட்டுநாள் யுத்தம் புரிந்து அவர்களைத் தோற்கடித்துத்தன்னுடைய தமையனை பாரதவர்ஷத்திற்குப் பார்த்திவனாய்ப் பட்டாபிஷேகம் பண்ணி வைத்தான். அப்படியிருக்க ஸம்ஸ்கிருதம் படித்தால் லௌகீக ஞானமும் லௌகீக வாழ்க்கைக்கு வேண்டிய யோக்கியதையும் அதிகமாகுமே யொழிய குறையாது என்பதற்கு வேறு அத்தாக்ஷியும் வேண்டுமா?

படிப்பின் முறையில் ஏராளமாய்ப் பாடங்கள் பிள்ளைகளுக்கு இருக்கின்றன வென்றும் ஸம்ஸ்கிருதத்தையும் படிக்கும்படி கட்டாயப் படுத்தினால் அவர்கள் சிரமம் அளவிற்கு மிஞ்சி அதிகரிக்குமென்று சிலர் சொல்லுகின்றார்கள். அது உண்மையானால் வேறுபாடங்களைக் குறைக்க வேண்டுமே யொழிய ஸம்ஸ்கிருதத்தை வேண்டாமென்று தள்ளக்கூடாது. ஸம்ஸ்கிருதபாஷை மிகவும் கடினமான பாஷை யென்பதும் சரியல்ல. ஆரம்பத்தில் கொஞ்சம் சிரமமாயிருந்தபோதிலும் பிற்பாடு அப்பாஷையைப் போல் நம் மனதைக்கவர்ந்து நாமாகவே அதைமேன்மேலும் படிக்க ப்ரோத்ஸாகப் படுத்தகூடிய பாஷை வேறொன்றும் கிடையாது.

தென்னிந்தியாவில் புதிதாய்க் கிளம்பிய பிராமணரல்லாத கக்ஷியில் சேர்ந்த சிலர் குறுகிய புத்தியுடன் இப்பாஷை பிராம்மணர்களுடைய பாஷை, ஆதலால் நாம் இதைப் படிக்கவேண்டிய அவசிய மில்லை யென்றும் படிக்கக்கூடாது என்றும் சொல்லிவருகிறார்கள். இது வீண் வாதம். உண்மையில் ஸம்ஸ்கிருத பாஷை பிராம்மணர்களுக்குக் காட்டிலும் பிராமணரல்லாதாருக்கு அதிக பாத்தியமுண்டு. ஸம்ஸ்கிருதத்தில் உயர்ந்த கிரந்தங்களை எழுதிய ஆசிரியர்களில் வால்மீகி, வியாஸர், ஸ்ரீ கிருஷ்ணன், காளிதாஸன், சூத்ரகன், ஸ்ரீ ஹர்ஷன், போஜன் முதலிய அநேகர் பிராம்மணர் அல்லாதவர்களே யொழிய பிராம்மணர்கள் அல்ல. தமிழிற்கும் ஸம்ஸ்கிருதத்திற்கும் ஏதோ விரோதமிருப்பது போல் சிலர் நடித்து வருகின்றார்கள். உண்மையில் இரண்டு பாஷைகளும் பெரிய பாஷைகள். இரண்டையும் தமிழ் நாட்டார் கசடறக்கற்கவேண்டு மென்பதுதான் என் கொள்கை.

இது இவ்வாறிருக்க நமது ஸர்வகலாசாலையில் பிள்ளைகள் தமிழையும் ஸம்ஸ்கிருதத்தையும் அவசியமாய்ப் படிக்கவேண்டு மென்று நான் எவ்வளவோ பிரயத்தனம் செய்தும் இதுகாறும் செவிடன் காதில் சங்கு ஊதியது போல்தானிருக்கின்றது. அதை மாற்றவேண்டு மென்றால் பொது ஜனங்கள் இவ்விஷயத்தில் கொஞ்சமாவது ஊக்கம் காட்டவேண்டியது அவசியம். ஜெர்மனி, பிரான்ஸ் அமெரிக்கா முதலிய தேசங்களில் நம்முடைய ஸம்ஸ்கிருத பாஷையின் பெருமையில் ஈடுபட்டு அப்பாஷையின் அபிவிருத்திக்காக ஏராளமான பணத்தை செலவழித்துப் பிள்ளைகளுக்கு கற்றுக்கொடுத்து கொண்டிருக்கையில் நமது நாட்டில் மாத்திரம் நாம் அப்பாஷையினிடத்தில் அலக்ஷியமா யிருப்பது அவமானமான காரியம். இனிமேலாவது நம் ஜனங்கள் விழித்துக்கொண்டு நமது பிள்ளைகள் ஸம்ஸ்கிருதத்தைக் கட்டாயமாய் படிக்கும்படி ஏற்பாடு செய்வார்களென்று நம்புகிறேன்.

நான் ஸம்ஸ்கிருத பாஷையையும் தமிழ் பாஷையையும் நம் பிள்ளைகள் படிக்கவேண்டு மென்று சொல்வதால் ஆங்கில பாஷையைப் படிக்கவேண்டா மென்று சொல்ல வரவில்லை. மேனாட்டுக் கல்வி, நாகரீகம், பாஷை முதலியவை நம் நாட்டின் உள்ளேயே வரலாகாது என்று

சிலர் சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. இது விஷயத்தில் நாம் எக்கல்வியையும் முடிந்த வரையில் கற்று இதர நாகரீகங்களில் உள்ள நல்ல அம்சங்களை நாம் அங்கீகரிப்பதால் • நம்முடைய நாகரீகத்தை இழந்து நாம் அயல் நாட்டு அடிமைகளாய்விடுவோமென்று மகாத்மா காந்தி சொல்வதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. வரகவி ரவீந்திர நாத் டாகூர் சொல்வதுபோல் • இதர நாட்டுக் கல்வியையறிந்து அதிலுள்ள நல்ல அம்சங்களை அங்கீகாரம் செய்யக்கூடிய தன்மை நம்முடைய புத்தியின் விசாலத்திற்கு ஓர் அறிகுறியே ஒழிய, புத்திக் குறைவிற்கல்ல.

அணுக்களும், அவை மாறுவதும்.

Atoms and their change.

P. N அப்புஸ்வாமி அய்யர், B. A. B.L.

அணுக்களின் நடுநாபியின் (Nucleus) அமைப்பையும் குணங்களையும் பற்றிக் கேம்ப்ரிட்ஜில் ஸர் எர்னெஸ்ட் ரதர்போர்ட் (Sir Ernest Rutherford) நடத்திவரும் ஆராய்ச்சிகளையும் அவற்றினால் அவர் கண்டுபிடித்த புதிய விஷயங்களையும் கேட்கும்போது நமக்கு மிகுந்த ஆச்சரியம் உண்டாகிறது. இரசாயன சாஸ்திரவிஷயமாகக் கொண்டுள்ளகொள்கைகள், காலத்துக்குக்காலம் புதிய அறிவு ஏற்பட ஏற்பட, மாறிக்கொண்டே வருகின்றன. பூதங்கள் அல்லது பகுக்கக் கூடாத மூலப்பொருள்கள்(Elements) என்று சில பொருள்களைக் குறித்துக் கூறிவந்த காலம் ஒன்று. பிறகு நாளடைவில் ரேடியம் (Radium) கண்டுபிடிக்கப்பட்டதும் இவ்வாறு மாறுப் பிரியாத் தன்மையுள்ள மூலப் பொருள்களுள் குறிப்பிட்ட சில மூலப்பொருள்களுள் ஒன்று மற்றொன்றாக மாறுகிறதென்பது தெரியவந்தது. இப்பொழுது இவர் நடத்திய ஆராய்ச்சிகளினின்று வேறு சில மூலப்பொருள்களும் அவ்வாறே மாறுகின்றனவென்பது தெளிவாகிறது. மேலும் சரியானமுறைகளை ஆய்ந்து நாம் பின்பற்றி வந்தால் எந்த வகையான மூலப்பொருளையும் நாம் நினைத்தபடி மற்றொரு பொருளாக மாற்றக்கூடும்போலிருக்கிறதென்று எண்ணுவதற்கும் இவ் ஆராய்ச்சிகள் இடம் தருகின்றன. எவ் உலோகத்தையும் நாம் நினைத்தபடி வெள்ளியாகவோ பொன்னாகவோ மாற்றக் கூடுமாம்!

நாம் அணுவென்று கூறிவருவது சிற்சில பாகங்கள் கொண்டது. அதற்கு அடிப்படையானது அதன் நுண் நுண்ணிய நடுநாபியே. இது தனும்ச (Positive) மின்சார சக்தியைப் பெற்றிருக்கிறது. இதைச் சுற்றிச் சிறிது தூரத்துக்கப்பால் சில நுண்ணிய பரமாணுக்கள் (Electrons) இருக்கின்றன. இவை இருணும்ச (Negative) மின்சார சக்தியைப் பெற்றிருக்கின்றன. ஒரு நடு நாபியை சுற்றியுள்ள பரமாணுக்களின் இருணும்ச மின்சாரத்தின் அளவும் அந்நடுநாபியிலுள்ள தனும்ச மின்சாரத்தின் அளவும் ஒன்றுபோல இருக்கின்றன. ஆதலால் இவை ஒன்றுக்கொண்டு ஈடுபட்டிருப்பதால், சாதாரணமாய் ஓர் அணுவில் மின்சாரகுணம் வெளித்தோன்றாது மறைந்திருக்கிறது. அணுவின் பிண்டத்தில் இரண்டாயிரத்தில் ஒரு பாகத்தைத் தவிர மீதி எல்லாம் நடு நாபியே. நடுநாபியிலுள்ள மின்சாரத்தின் அளவானது, பரமாணுவிலுள்ள மின்சாரத்தின் அளவை அணுத்தொகையால் (Atomic Number) பெருக்கினால் கிடைக்கும் அளவுக்குச்சரியாயிருக்கிறது. அணுத்தொகையென்பது மூலங்களை அணுப்பளுவின்படி (Atomic Weight) வரிசையாய் அடுக்கிக் கூறும்போது ஏற்படும் எண். உதாரணமாக ஹைட்ரஜன்=1, ஹீலியம்=2, லிதியம்=3. ஆகையால் ஓர் அணுவின் நடு நாபியைச் சுற்றியிருக்கும் பரமாணுக்களின் எண்ணும் அணுத்தொகையின் எண்ணும் ஒன்றே. அனேக வெவ்வேறு வழிகளாக ஆராய்ச்சிகள் நடத்தியதினின்று மேற்கூறிய சித்தாந்தங்கள் செய்யப்படுகின்றன. ஆதலால் தற்காலத்தில் இந்த சித்தாந்தங்கள் யாவும் சரியான சித்தாந்தங்கள் தாம் என்பதை நாம் ஒப்புக்கொள்ளத்தான் வேண்டியிருக்கிறது.

மேற்கூறிய அணுவின் நடுநாபியின் குறுக்களவானது ஒரு சதாம்சமீட்டரில் (Centimetre) கோடிலக்ஷத்தில் ஒரு பங்கு. இத்தகைய நுண்மை வாய்ந்த ஒரு பொருளுக்குள் என்ன என்ன இருக்கின்றன, அங்கு என்ன என்ன நிகழ்கின்றன என்னும் மிக அரிய ஆராய்ச்சிகளைத் தான் ரதர்போர்ட் செய்து வருகிறார். நமக்கு இது அசாத்தியமான காரியமாகத்தான் தோன்றுகிறது. அவர் வெவ்வேறு 'மூலங்களின்' அணுக்களை ரேடிய சக்தி பொருந்திய பொருள்களினின்று வேகமாய் வெளியே சிதறப்படும் மிக நுண்ணிய ஹீலியம் (Helium) அணுவின் நடு நாபிகளைக் (ஆல்பா துளிகளைக்) கொண்டு தாக்குகிறார். அவ்வாறு தாக்கப்பட்ட பொருள்களினின்று வெளியே தள்ளப்படும் பொருள்கள் இன்ன இன்னவென்று கவனிக்கிறார். இவ்வாறு வெகு சாக்கிரதையாகவும் சூக்ஷ்மமாகவும் கவனித்து வந்ததில் நைட்ரஜன் (Nitrogen) பாஸ்பரஸ் (Phosporus) போன்ற சில மூலங்கள் ஹீலியத்தால் தாக்குறும்போது ஹைட்ரஜனை(Hydrogen) வெளியேவிடுகின்றன வென்பது தெரியவந்தது. ஆனால் இவ்வாறு தாக்குற்ற ஆக்ஸிஜன் (Oxygen) கார்பன் (Carbon) இவைகளினின்று ஹைட்ரஜன் தள்ளப்படுவதில்லை. இவற்றினின்று வேறு ஏதோ விதமான பொருள்கள் வெளித் தள்ளப்படுகின்றன. அவை இன்ன இன்னவென்று இதுவரை நிருணயிக்க இடமில்லை. ஆதலால் செயற்கையால் இரசாயன மூலங்களுள் ஒன்றை மற்றொன்றாக மாற்றுவது சாத்தியமான காரியமாய்விட்டது.

நமது வெள்ளி நாணயங்கள்.

நமது தேசத்தில் ஜனங்களுக்கு சுயமாக தங்கள் பொது நன்மையை கவனித்து நடத்தகொள்ள சக்தியில்லையென்று சொல்லி நமது அரசாங்கத்தார் பல விஷயங்களை தாங்களே ஏற்றுக்கொண்டு வருகின்றார். அவ்விஷயங்களில் வியாபாரத்துக்கு உதவும் பணம் என்று ஸாதாரண ஜனங்களால் கூறப்படும் நாணயங்கள் ஒன்று. இந்நாணயங்கள் பொன் நாணயங்களாகவும், வெள்ளி நாணயங்களாகவும் இவைகளை ஆதாரமாகக் கொண்ட காகித நாணயங்களாகவும் உலகத்தில் வழங்கி வருகின்றன. அதாவது, எப்போதாவது வர்த்தகத்திற்கு உதவ அதிக நாணயங்கள் தேவையாயிருந்தால் ஸாதாரண ஜனங்களே தங்கக்கட்டிகளை தங்கசாலையில் கொடுத்து நாணயங்களாக அடித்துக்கொடுக்கும்படி கேட்கின்றனர். எப்போது நாணயங்கள் மிகுதியாக காணப்படுகின்றதோ அப்போது இந்நாணங்களை உருக்கி தங்கக்கட்டிகளாக மாற்றி அவற்றை வேறு உபயோகங்களுக்கு எடுத்துக்கொள்ளுகின்றனர். நம் நாட்டில் இந்த சௌகரியமில்லை. நமது அரசாங்கத்தாரே நாணயங்கள் வேண்டிய சமயத்தை தாங்களே தெரிந்து கொண்டு, அவைகளை அடிப்பதற்கு ஏற்பாடு செய்கிறார்கள். இந்நாட்டில் வழங்குவது வெள்ளி நாணயங்களே. ஆனால் இதர தேசங்களிலோ பெரும்பாலும் தங்க நாணயங்கள். இதர தேசத்துடன் நாம் வியாபாரம் செய்யும்போது நாம் அவைகளுக்கு செலுத்த வேண்டியதை தங்க நாணயங்களிலேயே செலுத்

தும்படி ஏற்படுகிறது. இவ்விதம் வியாபாரப் போக்கு வரவுகளில் பட்ட கடன்களை செலுத்துவதற்கு அரசாங்கத்தார் நமக்கு உதவிபுரியக்கடமைப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறு நம்தேசத்தில் மட்டும் வெள்ளி நாணயங்களாக இருப்பானேன்? இதற்கு அரசாங்கத்தார் நியாயமானவை என்று ஏற்றுக்கொள்ளும்படியான காரணங்கள் கூறுகிறார்கள்.

நாம் மேனாட்டார்களைப் போல் நாணயங்களை செட்டாக உபயோகிக்கக் கற்றுக்கொள்ளவில்லையென்றும் எல்லாவிதமான கொடுக்கல் வாங்கல்களுக்கும் நாணயங்களை உபயோகிக்க வேண்டுமென்றால் எண்ணற்ற நாணயங்கள் வேண்டியிருக்குமென்று, மலிவாயிருக்கும் நாணயங்களை தேசத்தில் வழங்கவிடுவது தகுதியென்றும் இதற்காகத்தான் வெள்ளி நாணயங்களும் காகித நாணயங்களும் விடுத்திருக்கிறார்கள் என்றும் சொல்லுகிறார்கள். இவ்விஷயங்கள் யாவும் உண்மையென்றே நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். இருந்தாலும், ஆரம்பத்திலேயே ஒரு புதிய வழக்கம் முழுமையும் திருப்திகரமாக நடக்காதென்றாலும் சில காலம் பழகிய பிறகு நம்முடைய குறைகளை திருத்திக்கொண்டு மேனாட்டார்களைப்போல் நாமும் இவ்விஷயத்தில் தேர்ச்சி அடையக்கூடும் என்பதில் ஐயமில்லை. நமது அரசாங்கத்தார் இனி எக்காலம் வரை நம்மைக் குழந்தைகள் போலும் தாங்கள் தகப்பன் போலும் சொல்லி வரப் போகிறார்கள் என்று தெரியவில்லை. இவ்வளவு காலமாகியும் நம்மிடம் இந்நாணய நிர்வாகத்தை கொடுக்காம லிருப்பது வருந்தத்தக்கது. அவர்களை நிர்வகிப்பதிலிருக்கும் குறைகள் பல இருக்கின்றன. வேறு தேசங்களுடன் வியாபாரம் செய்யும் நமது வர்த்தகர்கள் படும் துன்பங்கள் அளவற்றன. வியாபாரச் சரக்குகளின் விலை மாறுபாட்டை கவனிப்பதுடன் நமது வெள்ளி நாணயமாகிற ரூபாயின் மதிப்பில் ஏற்றத்தாழ்வையும் அவர்கள் கவனிக்க வேண்டியிருக்கிறது. நமது நாணயம் மதிப்பில் நாளுக்கு நாளும் தேசத்திற்கு தேசம் மாறுபாடு அடையாம லிருக்கவேண்டுமென்பது யாவரும் ஒப்பக் கூடியது. நமது அரசாங்கத்தாரின் காரியங்கள் பல இந்நாணய விஷயத்தில் நமக்குத் துன்பங்கள் விளைவித்திருக்கின்றன. இவ்விஷயத்தில் அவர்களும் பலசமயங்களில் துன்பப்படுகின்றார்கள். ஆகையால் இனி யாவது கூடிய சீக்கிரத்தில் இவ்விஷயத்தில் தாங்கள் தலையிடுவதை நிறுத்தி, ஒருதங்கசாலையை ஏற்படுத்தி, அங்கே ஜனங்கள் தங்கக் கட்டிகளைக் கொடுத்து நாணய மடித்துக் கொடுப்பதற்கு ஏற்பாடுகள் செய்வார்கள் என்று நம்புகிறோம்.

மாப்பிள்ளைத் தோழன்

'மணத்திற் கழகு கூட்டமும் நாட்டமும்' என்பது ஒரு புதுமொழி. கல்யாணங்களில் பந்துக்கள் எல்லோரும் ஒன்று சேருகிறோம். புது பந்துக்கள் ஏற்படுகிறார்கள். ஒருவரோடொருவர் அதிகமாய்ச் சேர்ந்து பழகி நண்பர்களாகிறோம். "கல்யாணக்காகிதம் கூட எழுதுவதில்லை" என்பதுதான் நாம் பந்துக்களின்மீது சாட்டக்கூடிய பெருங்குற்றம். மற்ற பிழைகளையும் குறைகளையும் நாம் எளிதில் மறக்கலாம். ஆனால் கல்யாண காலத்தில் கூட நம்மை நினையாதவனை நாம் பந்து என்று எப்படி அழைப்பது.

கல்யாணத்தில் உற்சாகமாய் அநுபவிக்கக் கூடிய அம்சங்கள் பல உண்டு. அவரவர்கள் வயதுக்குத் தக்கபடி ஒன்றையோ வேறொன்றையோ முக்கியமாக கொண்டாடுகின்றோம். வைதிகர்களை விட்டுவிடுவோம். அவர்களுக்கு சாப்பாட்டிலும் தக்ஷிணையிலுமே முக்கிய நோக்கம். ஒரு வேளை சுலோகங்கள் ஏதேனும் பாடத் தெரியுமென்று நினைத்துக்கொண்டால், சாப்பிடும்போது பாடுவதும் பிறகு பாட்டுக் கச்சேரிகள் முதல் வரிசையில் வந்து உட்காருவதும் அவர்கள் வழக்கம். சில கிழவர்களுக்கு தங்களுக்கு ஜதையான வேறு கிழவர்களுடன் கூச்சல்போட்டு சீட்டாடுவதற்கு சந்தர்ப்பம் வாய்க்கும். வேறு சிலர் வயது முதிர்ந்தபோதிலும், இப்போது குழந்தைப் பருவம் மாறாதவர்கள் போல் சிறுகுழந்தைகளுடைய பரிகாசங்களில் பங்கிற்கு வருவார்கள்.

இவ்விதமான கல்யாண மகோத்ஸவத்தில் சுகம் அநுபவிப்பவர் யாவருள்ளும் மாப்பிள்ளைத் தோழனே மிகவும் கொடுத்து வைத்தவன்; தனக்குத் தோழனாக இருக்கவேண்டுமென்று மாப்பிள்ளையாலே பொறுக்கி எடுக்கப்பட்டவன். அவன் மிகவும் அதிர்ஷ்டசாலி என்று சொல்ல வேண்டும். அவனைப் பொறுக்கி எடுப்பது மாப்பிள்ளையின் முக்கியமான சுதந்திரங்களில் ஒன்று. அந்த பதவிக்கு யாரை வேண்டுமானாலும் நியமிக்க முடியாது. அத்தான் அம்மான்சேய் இவர் போன்ற நெருங்கிய உறவாக இருத்தல் வேண்டும். விளையாட்டு சுபாவம் மாறாதவனாக இருக்கவேண்டும். கல்யாணம் ஆகாதவனாக இருத்தல் வேண்டும். அப்படியானால்தான் மாப்பிள்ளையும் தோழனைப்பார்த்து திரும்ப பரிகசிக்க முடியும். மாப்பிள்ளைக்குச்சற்று குறைந்த வயதுள்ளவனாகவோ அல்லது சமவயதாகவோ இருக்கவேண்டும். அவனுடன் நன்கு பழகி அவனுடைய குணாகுணங்களை உணர்ந்தவனாய் அவனுடைய முக்கியமான நண்பனாய் இருந்தால் நல்லது.

இப்படி சரியான ஒரு நல்ல தோழன் இல்லாவிட்டால், கல்யாணத்திற்கு வரும் சிறு பிள்ளை பெண்களுக்கு அதிலுள்ள வேடிக்கை விளையாட்டுகளாலுண்டாகும் உற்சாகம் போய்விடும். கல்யாணம் அவர்களுக்கு ரஸிக்காது. ஆனால் தோழன் தானாகவே எல்லா வேடிக்கைகளிலும் தலையிட்டுக் கொள்ளவேண்டும் என்று இல்லை. ஆனால் வேடிக்கை விளையாட்டுகளுக்கு அவன் உடந்தையாயிருந்தால் கல்யாணக்களிப்பு அதிகப்படும்.

மாப்பிள்ளைத் தோழனின் கடமைகள் மிகச் சிலவே. பரதேச கோலத்தின் போது மாப்பிள்ளைக்குக் குடைபிடிக்கவேண்டும். கல்யாணத்திற்கு முதல் நாளிரவு ஊர்வலம் வரும்போது மாப்பிள்ளையை எடுத்துக்காட்டும்படியாக அவன் பக்கத்தில் உட்காரவேண்டும். நான்கு நாளும் மாப்பிள்ளைக்கு வேண்டுமென்பதை வாங்கிக்கொடுத்து சௌகரியப்படுத்தவேண்டும். ஆனால் எப்போதும் மாப்பிள்ளையின் சேவகனைப்போல் சிசுருஷை செய்து நிற்கக்கூடாது. அவசியமாக மாப்பிள்ளைக்கு வேண்டியதைமட்டும், அவன் சங்கோசப்பட்டு வாய்திறவாதிருக்கும்போது இங்கிதத்தால் அறிந்து அவனுக்காக பேசல்வேண்டும். மாப்பிள்ளையின் குணங்களையும் நடை உடை ருசி முதலியவற்றையும் சற்று புகழ்வதும் சற்று பரிகசிப்பதுமாக இருக்கவேண்டும். இவைகள்தான் தோழனுடைய முக்கிய கடமைகளாகும்.

பரிகாசத்திற்கு ஏற்பட்ட சந்தர்ப்பங்கள் முக்கியமாக இரண்டு உண்டு. நாலு நாளும் சாயங்கால வேளையிற் பொழுது போக்குக்காக வைதிக முறை ஒன்றும் தழுவாததான 'நலங்கு' என்பது ஒன்று. இதில் முக்கியமாய் பரிகசிக்கப்படுவர் மாப்பிள்ளையும் பெண்ணுமே. ஒருவரை ஒருவர் உபசரிக்கும்படி சொல்லிக்கொடுத்து அப்படி உபசரிக்கும்போது கைகொட்டி நகைப்பது வழக்கம். இரண்டாவது சம்மந்தி ஏச்சு. அதாவது பெண்

வீட்டார் பிள்ளை வீட்டுக்காரரையும் பிள்ளை வீட்டார் பெண் வீட்டுக்காரரையும் பரஸ்பரம் வேடிக்கையாக ஏசிக்கொள்வது. இந்த வேலைகளில் பாடுவதற்கு என்று கோர்வையாக இசைக்கப்பட்ட பாட்டுகள் உண்டு. அவைகளிலுள்ள வருணனைகள், மாப்பிள்ளையினுடையவும் பெண்ணினுடையவும் அழகு, தோற்றம், பேச்சு இவைகளை வருணிக்கும்போது வாஸ்தவத்தை ஒத்திருந்தாலும் அல்லது அதற்கு நேர் விரோதமாக இருந்தாலும் கேட்பவர்கள் சிரிப்பிற்கு அளவு கிடையாது. இவ்விதமான பரிகாசத்திற்கு உரிய இரண்டு சந்தர்ப்பங்களிலும் இருக்க கூடியாரையும் தூண்டி பரிகாசத்தோடு பரிகாசமாய் சம்மந்திகளைப் பழகச்செய்வதில் மாப்பிள்ளைத்தோழனே முக்கியமானவன். ஆகவே மாப்பிள்ளைத் தோழன் இல்லாத கல்லியாணம் அவ்வளவு சுகப்படாது.

நானும் சில கல்லியாணங்களில் மாப்பிள்ளைத் தோழனாக இருந்திருக்கிறேன். அவைகளில் சரியான தோழனாக இருந்தேனோ இல்லையோ அதை அந்த மாப்பிள்ளைகளைக் கேட்டால் தான் தெரியும். ஆனால் இது மட்டும் நான் உறுதியாகச் சொல்வேன், நல்ல தோழன் கிடைக்க மாப்பிள்ளை கொடுத்து வைத்திருக்கவேண்டும். அப்படிக்கிடைகாவிட்டால் 'ஒப்புக்குச் சப்பாணி' என்று ஒருவனை வைத்துக் கொள்வதை விட கல்லியாண சமயத்தில் தோழன் இல்லாமலிருப்பது கூட நலமென்றே நான் சொல்வேன்.

காலத்தின் கொடுமை.

1917-ஹூ ஆனிமீ 23உ யன்று பண்ணை சீனிவாச ஐயர் தன் செல்வக் குமாரி சௌபாக்கியவதி வாமாக்ஷியை கன்னிகாதானம் செய்து கொடுத்தார். சகல ஜனங்களும் பண்ணையாரவர்கள் வரன் பொருக்கி எடுத்த சாமார்த்தியத்தை மெச்சினார்கள். பிராமணர்களில் அதிலும் சில வகுப்பாரில் நல்லவரன் கிடைப்பது அதிதுர்லபம். வாமாக்ஷியின் ஜாதகமோ அபரிமிதமான தோஷங்களுடன் கூடியது. அதற்குச் சரியாய் பொருத்தமுள்ள ஜாதகத்துடன் பிறந்தவரன் கிடைப்பது சிரமமே. மேலூர் ஜோஸியர் இந்தப் பெண்ணுக்காக சதா ஜாதகங்கள் பார்த்த வண்ணமே இருந்தும் சரியான பொருத்தத்துடன் கூடிய ஒரு ஜாதகம் இருக்கின்றது என்று சொல்ல மூன்று வருஷங்கள் வேண்டியிருந்ததே.

ஆனால் இவ்வளவு சிரமப் பட்டதற்கெல்லாம் பலன் கையின் மேற் கிடைத்தார் போல் அவ்வளவு திவ்வியமான வரன் வாய்த்தது பாருங்கள் என்று ஊரார் எல்லோரும் சொல்லிக்கொண்டார்கள். பையன் பி. ஏ. வகுப்பில் வாசிப்பவன். சற்று அழகு வாய்ந்தவன் என்றே சொல்லவேண்டும். பூர்வீக சொத்தும் உண்டு. அன்ன வஸ்திரத்திற்குக் குறைவில்லை. பார்த்தால் புத்திசாலி என்றே தோன்றிற்று. ஆனால், பெண்ணின் தகப்பனார் மட்டும் பண்ணையாராயிராவிட்டால் அதிலும் பண்ணை சீனிவாச ஐயராக இராவிட்டால் பெண்ணிற்கு இந்த வரன் கிட்டாது. வேறு யார் தான் ரூபாய் ஐயாயிரம் வரை பையன் வகைக்கு சீராகச்செய்து கலியாண மகோத்ஸவத்தையும் ஏற்ற விமரிசைகளுடன் நடப்பிக்க முடியும். பாப ஜாதகத்துடன் பிறந்த வாமாக்ஷி மட்டும் செல்வவனாய் பெண்ணின்மேல் அதிக வாஞ்சை வைத்தவனாய் இருந்த பண்ணை சீனிவாச ஐயரின் வயிற்றில் பிறக்காவிட்டால்!—

அப்படி இருந்தது அவளுடைய அதிர்ஷ்டம் தான் என்று சொல்லிக் கொண்டார்கள்.

இதென்ன, ஜோஸியர் இவ்வளவு சிரமப்பட்டுப் பொருக்கியுமா இந்தப் பெண்ணிற்கு இந்த கதி கிடைத்தது. ஆனால் அவர்தான் என்ன செய்வார். விதியை வெல்ல யாரால் தான் முடியும். அவருந்தான் மூன்று வருஷ காலமாய் ஜாதகங்கள் பார்த்துப் பார்த்து சலித்துப்போய் கடைசியில், சுமாராய் பொருத்தமுள்ள ஜாதகம் வந்ததும் சரியாயிருக்குமென்று எண்ணிவிட்டார்போலும்.

பாவம்! பண்ணையாருக்கு இவ்வித துக்கம் வரவேண்டுமென்று வேதா விதித்தான்போலும். நீங்களும் பெண்ணைப் பார்த்திருப்பீர்களே! பத்தரை மாத்துப்பொன்போன்றமேனி, ஐயோ—அப்படி அழகுவாய்ந்த பெண்மணியை ஒன்றுமறியாத வயதில் அலங்கோலப் படுத்திப் பார்க்க யார் தான் சகிப்பார்கள். அதிலும், அவளை எவ்வளவு செல்லமாய் வளர்த்து வந்தார் அவர்? இதைப்பற்றி நினைத்தால், எனக்குக்கூட மனது பதறுகின்றதே! அவர் இப்போது நினைத்திருக்கிற பிரகாரம் பெண்ணை அலங்கோலம் செய்யாமல் வைத்திருந்தால்நான் என்மனது ஒருவிதமாய் ஆறுதல் அடையும். இல்லாவிட்டால், பாவம்அவரும், அவளைக்கண்டுகண்டு ஏங்கி உருகி துரும்பாய் விடுவார் என்று தோன்றுகின்றது. இப்போதே, பாதி ஆள் ஆய்விட்டார்.

அவர்தான் என்ன செய்வார். எவ்வளவோ கஷ்டப்பட்டுதான் பார்த்தார். பொருத்தமுள்ள வரன் வேண்டுமென்று அலைந்து திரிந்து பொருக்கி எடுத்தார். அதுவுங் கூட இப்படிமுடிந்தால் யாருக்குத்தான் விதியின் கொடுமையில் நம்பிக்கை உண்டாகாது. ஒருவேளை மறுவிவாகம் செய்யலாமென்று அவர் மனம் துணிந்தாலும், அப்படியும் விதியை வெல்லமுடியுமா என்று தானே தோன்றும்.

வாமாக்ஷியும் பக்கத்தகத்து மணியும் பாலியம் முதல் பிரியத்துடன் பழகினவர்கள். ஆனாலும் வாமாக்ஷிக்குக் கல்யாணமானபிறகு, மணியும் படிப்பிற்காகப் பட்டணத்திற்கு போக நேரிடவே இருவரும் பிரிந்து பழைய சிநேகிதத்தைப் பாராட்ட முடியாமலிருந்தனர். சிநேகமும் காதலும் கிட்ட இருக்கு மட்டும் தான். ரத்தக்கலப்பாலுண்டாகும் பாந்தவ்வியமே பிரிந்தாலும்விட்டுபோகாதுஎன்று சொல்வதுண்டு. அதுபோல இருவரும் ஒருவரை ஒருவர் மறந்திருந்தார்கள்

ஆனால் இப்போது மணி விடுமுறை நாள்கள் வரவே, ஊருக்குத்திரும்பவந்திருக்கின்றான். அவன் ஊருக்குத்திரும்ப வந்த பிறகுதான் வாமாக்ஷி அமங்கலியான செய்தி தெரிய வந்தது. அது காதிற்படவே தன் பழையசிநேகமெல்லாம் ஞாபகத்திற்கு வந்தது. அவளுடைய நற்குணங்களும் நல்லொழுக்கமும் சௌந்தரியமும் மறுபடி அவன் மனதில் புதிய ஆவேசத்துடன் உதித்து அவனை அளவிலாத்துக்கத்தில் ஆழ்த்தின. எவ்வளவு துக்கம் வரினும் அவள் பொறுமை குன்றாமலும் மனம் சலியாமலும் இருப்பாள் என்று அவன் நிச்சயமாக நம்பினாலும் அவளுடைய முகத்தை ஒரு தரமாவது கண்டு தன் மனதிலிருக்கும் கொதிப்பை சாந்தம்செய்து கொள்ளவேண்டுமென்ற அவா அவனுக்கு நாளுக்குநாள் அதிகரித்தது. மேலும், ஒருவேளை, அவள தன்னைப்பார்த்தால் அவள் பார்வையிலிருந்தே அவளுடைய மனம் இநத துர்பாக்கியத்தை எவ்விதம் பொறுத்துக் கொண்டிருக்கின்றது என்று தான் அறிந்து கொள்ளலாமல்லவா.

ஒருவருமில்லாச் சமயத்தில் வாமாக்ஷியை மணி கண்ணுற்று கண்டான் போலும். இல்லாவிட்டால் இவ்வாறு தனக்குள் சொல்லிக்கொள்வானேன்?

"என்னாலேயே அவளுடைய அழகைக்கண்டு எழும்பும் காதலை அடக்க முடியவில்லையே. எவ்வளவோ படித்தும் நற்குணங்களில் ஓயாமல் பயின்றும் பயன்படவில்லையே. அவள், பாவம், ஒரு பேதைப் பெண். யௌவன பலத்தோடு பொங்கி எழும் காமப் பெருக்கை எவ்வாறு அடக்குவாள்? ஒரு வேளை எனக்குக் கல்யாணமாகி நான் மனைவியுடன் வாழ்ந்து இருந்தால் இவ்வித ஆசை உண்டாகாதோ என்னமோ? அப்படியே, அவளும் ஒரு புருஷனுடன் வாழ்ந்தால் அவள் கண்களிலிருந்து காமப்பொறி இவ்விதம் பறக்காது. வடிவு காலில்லாத குளத்தில்தானே வெள்ளம் கரையை உடைத்துப்போகும். அப்படித்தான் தெய்வத்தின் முன்பாக தவறுனது என்ன நடந்துவிட்டது. இந்தப் பாழும் சாதிவழக்கமொன்று இல்லாவிட்டால் ஒருவர்மீது ஒருவர் காதல் கொண்டிருக்கும் நாங்கள் மணந்து சுகித்திருக்கலாமே.

இப்போது தான் என்ன தவறிப்போய் விட்டது? அவர்களுடைய தகப்பனாரிடம் சென்று வாதாடி, "இப்படி உங்கள் செல்வக்குழந்தையை ஊரார் ஏச்சுக்குப் பலியாகக் கொடுப்பது மிகவும் இழிவல்லவா? பெருங்குற்ற மல்லவா?" என்று பலவிதமாய் கட்டாயப்படுத்தி, என் தாயார் தகப்பனார் வருத்தம் கொண்டபோதிலும் ஏன் நான் அவளையே மணந்து கொள்ளக்கூடாது.

ஒரு நாள் பின்கட்டுக்குப் போய் திரும்பிய பண்ணை சீனிவாச ஐயர் "ஆ! வாமாக்ஷியை யாருக்காவது மறுமணம் செய்விக்காமல் போனேனே. இப்படி யாராவது ஒரு சுந்தர புருஷனுடன் சுகிக்கவேண்டும் என்று தவிப்பதையும் தான் அப்படி எண்ணுவதும் தவறு என்று காமத்திற்கும் கடமைக்கும் இடையில் அவள் உள்ளம் ஊசலாடு வதையுமா நான் காண வேண்டும்.

முதலில், மணிமேல் ஆசை கொண்டவள் தோன்றினபோது நான் அவளை சம்மதிக்கச் செய்து மறுவிவாகம் செய்து கொடுக்கலாமென்று இருந்தேனே! ஏன் அப்போது சற்று தயங்கினேன்! அதற்குள் அவனுக்கு வேறு இடத்தில் கல்யாணமாகி அவனும் வேறு ஊருக்குப் போய்விட்டானே! யாருக்குக் கல்யாணம் செய்து கொடுக்கிறேன் என்றாலும், அவள் ஒப்பவில்லையே. ஆ! என் செய்வேன், என்று துக்கம் மேலிட திடீரென மூர்ச்சித்து கீழே விழுந்தார்.

மறுநாட்காலை பண்ணையார் சிவ லோகப்பிராப்தி அடைந்தார் என்ற சமாசாரம் ஊரெங்கும் பரவிற்று. அனாயாஸ மரணம் என்றால் இவருக்குப் போல் அன்றோ கிடைக்கவேண்டும், என்று அவ்வூர் கிழவர்கள் சொல்லிக்கொண்டார்கள். வாஸ்தவம் யாருக்குத் தெரியும்?

ஆந்த்ரா ஆயுர்வேத வைத்திய சாலை
லிமிடெட்.
19, ஆரிஸ் ரோட்டு, சென்னை
டாக்டர். A. லக்ஷ்மிபதி
Founder and Managing Director.
சகல வியாதிகளுக்கும் சாஸ்திர முறைப்படி தயாரிக்கப்பட்ட மருந்துகள் கிடைக்கும்.
கியாட்டலாக்குக்கு எழுதுங்கள்.

காஞ்சீபுரம் கருடசேர்வை
விளம்பரங்கள்.
நாளது வைகாசிமீ உற்சவத்தில் ஏராளமான ஜனங்கள் வெளியூர்களிலிருந்து சேருவார்கள். ஷெ காலத்தில் துண்டுபிரசுரங்கள், நோட்டீசுகள், படமுள்ள விளம்பரங்கள் முதலியன வீடுவீடாகவும் முக்கிய இடங்களிலும், வினியோகப்படுத்தி வியாபாரவிருத்தி செய்வதற்கு தக்க ஏற்பாடுகள் செய்திருக்கிறோம். விவரங்களுக்கு போதுமான தபால் முத்திரைகளுடன் எழுதவும்.
MADRAS ADVERTISINGS
(சென்னை விளம்பரங்கள்).
10, VENKAIER STREET, MADRAS.

வேண்டும்
அளவு 27" × 17" மேற்படாத
பிரகடனங்கள்
ஜட்காவண்டி
மேற்கூரையில் ஒட்டுவதற்கு
நூற்றுக்கு
தினத்திற்கு ரூ. 5-0-0
வாரத்திற்கு ரூ. 21-0-0

சென்னை ஜார்ஜ் டவுன் நெ. 1, மக்லீன் தெருவு, எவ்வரிமான்ஸ் அச்சுக்கூடத்தில் D. சுந்தர வரதனால் அச்சிடப்பட்டு, சென்னை மைலாப்பூர், பசுபதி அக்கிரஹாரம், நெ. 16, 'தமிழ் உலகு' கார்யாலயத்தில் R. பஞ்சாபகேசையரால் பிரசுரிக்கப்பட்டது.